**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 102/2012 | வா.சா. | : 1 |
| பெயர் | : நடராஜன் | த/பெ. | : ராஜாங்கம் |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : மாரியம்மன் கோவில் தெரு, |
| தேதி | : 28.07.2025 | வயது | : 62 /2025 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

13) தாவா 1வது லக்கச் சொத்தானது கிழமேல் ஐந்தரை அடியும் தென்வடல் 101 அடியும் உள்ளது என்றால் சரிதான். இரண்டு மற்றும் மூன்றாவது லக்க சொத்துக்களின் மதிப்பு வா.சா.ஆ.5 ஆவணத்தின்படி சதுர அடி ரூ.180.28/– பைசா என்றால் சரிதான்.அதன் அடிப்படையில் 1வது இலக்க சொத்தின் மதிப்பு ரூபாய 1,00,196/– இருக்கும் என்றால் சரிதான். தாவா 1வது இலக்கச் சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். 1வது இலக்கச் சொத்து காம்பவுண்ட் சுவர் வைக்கப்பட்டு பிரதிவாதிகள் வசம் உள்ளது என்றால் சரிதான். 1வது இலக்கச் சொத்து எனது அனுபவத்தில் இல்லை என்பதால் சொத்து மதிப்பு பொறுத்து சார்பு நீதிமன்றத்தில் தான் வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்றால் சரியல்ல. ராமநாதன் மற்றும் மருதையப்பன் செட்டியார் பாகம் பிரித்துக்கொண்டது வடக்கு பக்கம் ஒரே சீராக நீளமாக உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் பாகம் பிரித்துக்கொண்டது மேற்சொன்னதுபோல் தான் உள்ளது என்றாலும், வழக்கிற்காக தெரியாது என்று மறைக்கிறேன் என்றால் சரியல்ல.

14) பிராது மற்றும் எனது நிரூபண வாக்குமூலத்தில் 1வது இலக்க சொத்தை எனது தந்தை கிரையம் பெற்ற பிறகு எனது தந்தையும், மருதையப்பன்

செட்டியாரும் சேர்ந்து அனுபவம் செய்து வந்தார்கள் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, 1952 பத்திரத்தில் கண்டுள்ளது. எனது தகப்பனார் கிரையம் வாங்கியது 1956 என்றால் சரிதான். 1956 ஆம் வருடத்திற்கு பின்பு எனது தகப்பனாரும், மருதையப்பன் செட்டியாரும் சேர்ந்து அனுபவம் செய்து வந்ததை காட்ட ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு வா.சா.ஆ.5 தான செட்டில்மெண்ட் பத்திரமானது மேற்படி ஆவணத்தில் கண்ட அதே வீட்டு அளவுகளில் எனது தந்தை எனக்கு தானமாக எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான்.

15) வீட்டின் வடக்கு மற்றும் தெற்கு பக்க கிழமேல் அளவு 37 அடி என்றால் சரிதான். மேற்படி 37 அடி சுவற்றிற்கும் கீழ்ப்பக்கத்தில் அங்காள பரமேஸ்வரி கோவில் இடம் உள்ளது என்றால் சரிதான். வீட்டுசுவற்றிற்கும் மேற்படி கோவிலுக்கும் இடையே எவ்வளவு இடைவெளி இருந்தது என்றால் இடைவெளி கிடையாது. எனது தகப்பனார் கிரையம் வாங்கிய வீட்டிற்கு கிழமேல் மொத்தம் 58 அடியில் 37 அடி போக மீதம் மேற்குபக்கம் 21 அடி உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் முன்வாசல், பின்வாசல், முற்றம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பின்வாசல் தொடர்பான விபரம் குறிப்பிடப்படவில்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தில் முன்தாழ்வாரமும், முன்வாசல் இடமும், பின் கொல்லையிடமும், கீழ்புறமுள்ள காலியிடமும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

16) என்னுடைய நிரூபண வாக்குமூலம் பாரா–20ல் மருதையப்பனுக்கு பாத்தியப்பட்ட சந்தாக காண்பித்திருப்பது தவறானது என்றும், பத்திரத்தின் சரத்துக்களான கவனக்குறைவால் முந்தைய ஆவணங்களின்படி காட்டப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த விபரத்தை எனது பிராதில் குறிப்பிடவில்லை என்றால் எனது அப்பா பிராதை தாக்கல் செய்ததால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. எனது தந்தை கிரையம் வாங்கிய கிழமேல் 58 அடியில் வீடு 37 அடி நீங்கலாக உள்ள 21 அடி

காலியிடத்தை தான் 2, 3 இலக்கச் சொத்துக்களுக்கு சென்றுவர பயன்படுத்தி வந்தோம் என்றால் சரியல்ல. நானும், எனது தந்தையும், எனது தந்தைக்கு கிரையம் எழுதிக்கொடுத்த முன்பாத்தியஸ்தர்கள் தாவா 1வது இலக்கச் சொத்தை பொது சந்தாக வைத்து அனுபவம் செய்து வரவில்லை என்றால் சரியல்ல.

17) தாவா 1வது இலக்கச் சொத்தானது வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி மருதையப்பன் செட்டியாருக்கு மட்டுமே தனித்து ஒதுக்கப்பட்டது என்றாலும், அவர் மட்டுமே அந்த சொத்தை தனித்து அனுபவம் செய்து வந்தார் என்றாலும், அதில் ராமநாதன் செட்டியாரும், அவரிடம் கிரையம் பெற்ற என் தந்தையோ, என் தந்தையிடமிருந்து தானமாக பெற்ற நானோ 1வது இலக்கச் சொத்தை அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. அங்காளபரமேஸ்வரி கோவில் காம்பவுண்ட் சுவர் என் தந்தை கிரையம் வாங்கியதற்கு முன்பே கட்டப்பட்டுள்ளது. தென்கிழக்கில் ஒழுங்குமுறை விற்பனை கூடம் உள்ளது என்றால் சரிதான். அந்த ஒழுங்குமுறை விற்பனை கூட காம்பவுண்ட் சுவர் என் தந்தை கிரையம் வாங்கியதற்கு பின்பு அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

18) என் தகப்பனார் கிரையம் வாங்கும் போது அளந்து கிரையம் பெற்றாரா என்றால் தெரியாது. பிரதிவாதிகள் வீட்டிற்கு மேற்குபக்கம் யார் வீடு உள்ளது என்றால் நாகலிங்கம் செட்டியார், ஆறுமுகம் செட்டியார், காட்டுவா ராவுத்தர் ஆகியோரது வீடு உள்ளது. மேற்படி நபர்களின் வீட்டிற்கான வாசல் மேற்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் வீட்டிற்கு தெற்கே M.P.M.முகமது இப்ராஹிம் என்பவரது வீடு உள்ளது என்றால் பெயர் தெரியாது, முஸ்லிம் வீடு உள்ளது. அந்த வீட்டிற்கான வாசலானது தெற்குபுறம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி மேற்கு மற்றும் தெற்கில் உள்ள நபர்களுக்கு 1வது இலக்கச் சொத்து வழியாக வந்து செல்வதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சரிதான்.

19) எனது பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்திலும், 3ம் நபர்கள் 1வது இலக்கச் சொத்து வழிவேண்டும் என்று கோரிவிடுவார்கள் என்பதற்காக பாகப்பத்திரத்தில் தனித்த சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளதாக நான் தெரிவித்த

சங்கதிகள் தவறானது என்றால் சரியல்ல. தாவா 1வது இலக்கச் சொத்தைப் பொறுத்து எனது பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொந்த சந்து என தவறானதும், முந்தைய ஆவணங்களின்படி ஏற்படுத்தப்பட்டது என்றும், 3ம் நபர்கள் உரிமை கோரிவிடுவார்கள் என்றும், மருதையப்பன் செட்டியாரும், பிரதிவாதிகளும் மோசடியாக சொந்த சந்து என ஆவணங்கள் உற்பத்தி செய்துள்ளார்கள் என்றும், வழக்கிற்காக பல்வேறு விதமான நிலைப்பாடுகளை எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

20) வா.சா.ஆ.1 மாதிரி வரைபடமானது வழக்குச் சொத்தை பொறுத்து உண்மை நிலைபாட்டை தெளிவுப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட்டிற்கு பிறகு எனது பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.5 ஆவணமானது நடைமுறைக்கு வரவில்லை என்றாலும், நான் அதில் கண்ட சொத்தை அனுபவம் செய்து வரவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு 1வது இலக்கச் சொத்தில் கண்ட காம்பவுண்ட் சுவரானது பிரதிவாதிகளால் 2008ம் வருடமே கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10ல் கண்ட புகைப்படங்கள், C.D. மற்றும் அதன் நெகடிவ் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி புகைப்படங்கள் யாரால், எதுபோன்ற கருவியை பயன்படுத்தி எடுக்கப்பட்டது என்று பிராதில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

21) பிராது பாரா–12ல் 26.12.2010ல் இரவோடு இரவாக காம்பவுண்ட் சுவரை கட்டிமுடித்துவிட்டதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.10 ஆவணத்தில் புகைப்படங்களில் 26.01.2011 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எனது பிராதிலும் ஆவணத்திலும் மாறுபட்ட விபரங்களை தெரிவித்துள்ளேன் என்றாலும் மேற்படி வா.சா.ஆ.10 புகைப்படங்கள் ஆனது வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இரண்டாவது முறையாக நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை

பார்வையிட சென்றபோது எனது வழக்கறிஞர் மூலமாக மாதிரி வரைபடம் ஒன்றை அவரிடம் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த மாதிரி வரைபடத்தில் எனது வீட்டிற்கு கிழக்கு பக்கம் மற்றும் மேற்கு பக்கத்தில் சந்து உள்ளதாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான்.

22) நீ.ம.சா.ஆ.1 அறிக்கை மற்றும் வரைபடத்தில் எனது வீட்டிற்கு கிழக்கு மற்றும் மேற்கு பக்கத்தில் சந்து உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்கு புறமுள்ள சந்து ஆனது 1.7 மீட்டர் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். எனது சொத்திற்கு வடபுறமும், பிரதிவாதிகளின் வீட்டிற்கு வடபுறமும் ஒரே நேர்கோட்டில் அமைந்துள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே, தாக்கல் செய்த வழக்கானது நீதிமன்ற அனுமதியுடன் அதே வழக்கு மூலத்திற்காக வழக்கு தாக்கல் செய்வதாக தெரிவித்துவிட்டு புதிய வழக்கு மூலத்தை காட்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளபோது 1வது இலக்கச் சொத்தானது பொது சந்து கிடையாது.

23) ராமநாதன் செட்டியாரும், மருதையப்பன் செட்டியாரும் 1வது இலக்கச் சொத்தை பாகப்பிரிவினைக்கு பிறகு பொது சந்தாக அனுபவம் செய்து வரவில்லை என்றால் சரியல்ல. 1வது இலக்கச் சொத்தானது மருதையப்பன் செட்டியாருக்கு தனித்த சொத்தாக தனிஅனுபவத்தில் இருந்து வந்தது என்றால் சரியல்ல. அவரோ, எனது தகப்பனாரோ மேற்படி சொத்தை பொது சந்தாக அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. மருதையப்பன் செட்டியார் வாரிசுகள் செய்துகொண்ட பாகபிரிவினையின் அடிப்படையிலும், அதற்க பிறகு கிரையம் பெற்ற பிரதிவாதிகள் 1வது இலக்கச் சொத்தை அவர்களுக்கான தனி சந்தாக அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 மற்றும் 9 ஆவணங்களானது வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.

24) நான் இந்த வழக்கில் கட்டியுள்ள நீதிமன்ற கட்டணம் குறைவானது என்றாலும், சொத்து மதிப்பு குறைவாக காட்டியுள்ளேன் என்றாலும் சரியல்ல. இந்த நீதிமன்ற ஆள்வரையறைக்குள் வழக்கு சொத்து தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 28.07.2025 கையெழுத்து செய்துள்ளார்.

J.Aafreen Begum
Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.07.28 14:16:24 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.